# EPS தொழில் ஆர்வலர்களுக்கான தொழில் மாற்றம் தொடர்பான விண்ணப்பத்தின் அறிவிப்பு

2023ம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கும் ஒதுக்கீட்டின்படி பிற துறைகளில் வேலை பெற ஆர்வம் உள்ளவர்களுக்கு உற்பத்தி துறையில் இருந்து கப்பல் நிர்மாணிப்பிற்கான தொழில்மாற்ற விண்ணப்பத்தை பெறுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

2023ம் ஆண்டு ஏப்ரல் 27ம் திகதி
இவெவேப

1. ஆட்சேர்ப்பு துறை : கப்பல் நிர்மாணித்தல்

* தொழிலிற்கான துணைபிரிவு【இணைப்பினை பார்க்கவும்】:

- தூக்குமரம்
- பாதுகாப்பு
- கிரைண்டர்
- உலோக இணைப்பாளர் (வேல்டிங் உதவியாளர்)
- குழாய் இயந்திரங்கள் இணைப்பு ' -மின்சார இணைப்பினை வழங்குதல்

2. விண்ணப்பங்களுக்கான தகுதி

- **2023டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு பின் றோஸ்டர்முடிவடைந்தவேலைதேடுபவர்கள் மற்றும் உற்பத்தி துறையில் வேலை தேடுபவர்கள்**

3. விண்ணப்ப காலம்: 09நாட்கள்( 2023 ஏப்ரல்2 7ம் திகதி தொடக்கம் மே 05ம் திகதி)

4. விண்ணப்ப முறை

-கப்பல் நிர்மாணிப்பிற்கான துணைபிரிவுகளில் ஒன்றினைவிண்ணப்பத்தில் தெரிவுசெய்தல்.

5. விண்ணப்ப இடம்: இவெவேப வலைதளம் (www.slbfe.lk)

## ※ அறிவித்தல்

1.கப்பல் நிர்மாணிப்பதிலும் முன்னனுபவம் இல்லாவிட்டாலும் விண்ணப்பிக்கமுடியும். அதிகவிண்ணப்பதாரர்கள் இருப்பார்களானால் கப்பல் நிர்மானிக்கும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவர் அல்லது கட்டுமானத்துறையில் வேல்டிங் செயற்பாட்டிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கையானது 600ஐ விட அதிகமாக இருப்பின் கொரிய மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தீர்மானத்தின்பேரில் தெரிவு செய்யப்படுவார்கள்.

2.தொழில் ஆர்வலர்கள் கப்பல் நிர்மாணிக்கும் தொழிலுக்கு மாற்றப்பட்டு கொரியாவிலுள்ள வியாபார உரிமையாளரினால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அவர் முதலில் கொரியாவிற்குள் நுழைவார்.விரும்பிய தொழிற்துறையினை மாற்றுதல் கொரியாவில் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்காது எனினும் வேலைவாய்ப்பு நடைமுறைகள் அனைத்தும் முன்பு போலவே இருக்கும்.

3.தொழிற்துறையின்மேலே காட்டப்பட்டுள்ள 05 துணைபிரிவுகளை மாற்றுவதற்கு

தேர்ந்தெடுக்கவும்.இருப்பினும் நீங்கள் கொரியாவில் பணிபுரியும் போது பணியிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட விரிவான தொழிலினை தவிர வேறு தொழில்களையும் செய்யலாம்.

4. பணிபுரியும் நிறுவனத்தினைப் பொறுத்து கப்பல் நிர்மாணிக்கும் தொழில் தொடர்பான தொழிற்பயிற்சியினைஒருமாதம் பெறலாம்.இக்காலக்கட்டத்தில் ஊதியம் வழங்கப்படும்.மேலும் பரிந்துரைக்கப்பட்டபயிற்சி செலவுகள் கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றன.

5.நீங்கள் ஒரு தொழில் ஒப்பந்தத்துடன் பணியிடத்தில் தொழில் புரியவேண்டும்.பணியிடத்தைமாற்றுவதற்கானகாரணம் ஏற்படுமாயின் கப்பல் நிர்மாணிக்கும் துறையில் மட்டுமே பணியிடத்தினை மாற்ற வேண்டும்.

6. வேலை தேடுவோர் பட்டியலிலின் செல்லுபடியாகும் காலம் முன்னால் (உற்பத்தி) பட்டியலின் எஞ்சியதை போல இருக்கும் (செல்லுபடியாவதற்கான கால நீடிப்பு இல்லை)

## 【இணைப்பு】கப்பல் நிர்மாணிக்கும் துறையின் உப பிரிவுகள்

| உப பிரிவின் பெயர் | படம் | ஆரம்ப வேலை |
|---|---|---|
| தூக்குமரம் |  | ○ உயர் இடத்தில் வேலை செய்வதற்கான தூக்குமரங்களை நிறுவுதல், வெளியிடுதல் மற்றும் வகைப்படுத்தல். |
| பாதுகாப்பு |  | ○ குளிர் மற்றும் அதிக வெப்பநிலை திரவ மண்டல பாதுகாப்பிற்காக குழாய் மற்றும் கட்டமைப்பு பாதுகாப்பு பொருட்களை நிறுவுதல். |
| க்ரைண்டர் |  | ○ வெல்ட் செய்யப்பட்ட மேற்பரப்பின் சீரற்ற பகுதிகளை அகற்றி மென்மையாக்குவதன் மூலம் பூச்சு பூசும் வேலையினை இலகுவாக்குதல். |

| | | |
|---|---|---|
| உலோக இணைப்பாளர் (டெக் வெல்டிங்) |   | ○ அதேஉலோகத்தினைநிரப்புவதன் மூலம் இணைக்கவேண்டியபொருட்களை இணைக்கும் வேலை<br>○ இணைப்பு சிதைவினை கருத்திற்கொண்டுஅனுமதிக்க கூடியவாறுஇலகுதன்மையினைவைத்திருக்கும் போதுஉலோக இணைப்புக்களை ஒட்டுவதற்கான வேலை |
| குழாய் இயந்திரம், இணைத்தல், மின் கேப்ளிங் |   | ○ கப்பலுக்கான பல்வேறு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை நிறுவுதல், குழாய்களை கட்டுதல் அல்லது நிறுவுதல்.<br>○ மின்சாதனங்களின் மின் கேபிள்களை இணைக்கும் இடத்தில் மின் கேபிள்களை இணைக்கும் இடத்தில் மின் கேள்களைஏற்பாடு செய்தல் |